

தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தல் கழக வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி மூலனூர் மேற்கு ஒன்றியம், எடக்கல் பாடி ஊராட்சி, உள்ள சக்கரைவலசில் உதயசூரியன் சின்னத்திற்குவாக்குகள் சேகரித்தார். நிகழ்வில் கழக துணை பொது செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு, கழக கொள்கை பரப்பு இணைச் செயலாளர் வி.சி.சந்திரகுமார், மாவட்ட துணை செயலாளர் ஆ.செந்தில்குமார், மாவட்டப் பொருளாளர் ப.க.பழனிசாமி, ஈரோடு ஒன்றிய செயலாளர் தோப்பு டி.சதாசிவம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.எஸ்.குமாரசாமி, ப.மணிராசு, கதிரம்பட்டி மகாலிங்கம், நசியனூர் பேரூர் செயலாளர் மோகன சுந்தரி, லோகேஷ், இளைஞர் அணி ரகு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள், கூட்டணிக் கட்சி தலைவர்கள் தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலில் மேற்கொள்ளவிற்கும் பிரச்சாரப் பயணங்கள் குறித்த ஆலோசனை கூட்டம் தலைமை தேர்தல் பணிமனையில் முன்னாள் அமைச்சர்கள் கழக முதன்மை செயலாளர் கே.என்.நேரு தலைமையில் கழக துணை பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி, மு.பெ.சாமிநாதன், திருப்பூர் கிழக்கு மாவட்ட செயலாளர் இல.பத்மநாபன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர்கள், முன்னாள் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### தமிழகத்தில் அறிவிக்கப்படாத மின்வெட்டு - 24 மணி நேரத்தில் 8 படுகொலைகள்!

# சட்டம் - ஒழுங்கு சீரழிவு: அரசு மவுனம் காக்காமல் உடனடியாகச் செயல்படுமா?

## தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கேள்வி!

சென்னை, செப். 23 –

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் அறிவிக்கப்படாத மின்வெட்டு உள்ளது. மேலும் 24 மணி நேரத்தில் 8 படுகொலைகள் காரணமாக சட்டம் –ஒழுங்கு சீரழிந்துள்ளது. எனவே அரசு மவுனம் காக்காமல் உடனடியாக செயல்படுமா என்று தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா எம்.எல்.ஏ. கேள்வி எழுப்பியுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: சிவகங்கை மாவட்டத்தில் நடந்த இரட்டைக் கொலை சம்பவம் பொதுமக்களிடையே மிகப்பெரிய அச்சத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.



மதுரையில் ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலையம் அருகே ஒருவர் நடுரோட்டில் விரட்டிச் சென்று வெட்டி படுகொலை, கிருஷ்ணகிரி அருகே டாஸ்மாக் கடையுடன் தொடர்புடைய இடத்தில் ஏற்பட்ட தகராறில் 33 வயது இளைஞர் கல்லால் தாக்கப்பட்டு உயிரிழந்த சம்பவமும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த படுகொலைகளுக்கும், தமிழ்நாட்டில் சட்டம்–ஒழுங்கு சீர்குலைந்ததற்கும் அரசு என்ன பதிலளிக்கிறது.

நெய்வேலி என்.எல்.சி. திட்டங்களுக்காக விவசாய நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வரும் நிலையில், ஏற்கனவே நிலம் வழங்கிய விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை அரசு முதலில் உறுதி செய்ய வேண்டும். முதலில் ஏற்கனவே நிலம் வழங்கிய மக்களுக்கான வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள், அதன் பின்னரே புதிய விளைநிலங்களை கையகப்படுத்துவது குறித்து பேசுங்கள்.

தமிழ்நாட்டில் டெங்கு பாதிப்புகளும், உயிரிழப்புகளும் நடந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. எனவே, அரசு வெறும் அறிவிப்புகளோடு நிற்காமல், களத்தில் தீவிரமான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். திருச்சி மாவட்டத்தில் ரூ.247.15 கோடி பயிர்க்கடன் 50,779 விவசாயி களுக்கு தள்ளுபடி செய்யப்பட்டதாக கூட்டுறவுத்துறை தெரிவித்துள்ளது. ஆனால், முழுமையான கடன் தள்ளுபடியே தங்களது கோரிக்கை என்று விவசாயிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

**மீனவர்கள் மத்தியில் அச்சமும் - எதிர்ப்பும்!**

சென்னை பட்டினப்பாக்கம் பகுதியில் தலைமைச் செயலகம் தொடர்பான அறிவிப்பு குறித்து மீனவர்கள் மத்தியில் அச்சமும், எதிர்ப்பும் ஏற்பட்டுள்ளது. அந்த பகுதியின் மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான கவலைகளை அரசு உரிய முறையில் பரிசீலிக்க வேண்டும். கர்நாடக அரசை உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி மீண்டும் காவிரியில் தண்ணீர் திறக்க தமிழக முதல்வர் விவசாயிகள் நலன் கருதி வலியுறுத்துவாரா?

**இன்றைய தமிழ்நாட்டின் மக்கள் கதி என்ன?**

தமிழகத்தில் அறிவிக்கப்படாத மின்வெட்டு பாதிப்பால் ஒருபுறம், டெங்குவால் பொதுமக்கள் பாதிப்பு ஒருபுறம், கொசு கடியால் மக்கள் அவதி ஒருபுறம், இந்த நிலையில் இன்றைய தமிழ்நாடு, மக்கள் கதி என்ன? திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் அறுவடை செய்யப்பட்ட நெல் மூட்டைகள் மழையால் பாதிக்கப்பட்டுள்ளது.

விருத்தாசலம் சின்னப்பரூர் மற்றும் பல கிராமங்களில் ஆயிரக்கணக்கான நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யாததனால் மழையில் நனைந்து வீணாவதை அரசு எப்போது தடுக்கப் போகிறது?. இப்படி பல்வேறு மக்கள் பிரச்சினைகளுக்கு அரசு மவுனம் காக்காமல் உடனடியாக செயல்படுமா?. இல்லையெனில் செவிடன் காதில் ஊதிய சங்கு போல இந்த அரசு என்று மக்கள் முடிவு செய்வார்கள்.

இவ்வாறு பிரேமலதா வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### மதுராந்தகம் – தாராபுரம் இடைத்தேர்தல்:

# தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு பல்வேறு கட்சிகள் ஆதரவு!

சென்னை, செப். 23 -

நடைபெறவிருக்கும் மதுராந்தகம், தாராபுரம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கான இடைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு,

ஜி.எஸ்.மதுஹரி கிருஷ்ணா ரெட்டி அவர்களை அகில இந்திய பொதுச் செயலாளராகவும் - ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானா ஆகிய மாநில பொறுப்பாளராக கொண்ட சமதா கட்சி;

எம்.முகம்மது இல்யாஸ் அவர்களை நிறுவன தலைவராக கொண்ட தமிழ் தாயக மக்கள் முன்னேற்ற கட்சி;

ஏ.யூனுஸ்கான் அவர்கள் மாநிலத் தலைவராக கொண்ட" தமிழக பழனிபாபா கழகம்";

ஆகிய கட்சிகள் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் முழு ஆதரவு அளிப்பதாகவும்; இத்தொகுதிகளில் அறிவிக்கப்பட்டுள்ள கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு முழுமையாக பாடுபடுவதாக தெரிவித்துள்ளனர்.



### தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.சங்க (பதிவு எண். **176/KKM,** பேரவை இணைப்பு எண். 438)தின் நாகர்கோயில் மண்டல பணிமனைகள் மற்றும் மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தலை நடத்துவதற்கு மதுரை மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் எஸ்.கருணாநிதி தேர்தல் ஆணையாளராக நியமனம் செய்யப்படுகிறார். தேர்தல் விதிமுறைகள் மற்றும் தேர்தல் கால அட்டவணை ஆகியவை தேர்தல் ஆணையாளரால் தனியாக வெளியிடப்படும்.

கலைஞரகம்
சென்னை – 17
நாள்: 16.09.2026

**மு.சண்முகம்,**
பொதுச்செயலாளர்,
தொ.மு.ச. பேரவை


## ஆண்டவன் சாட்சியாக



மின்வெட்டுக்கு
தீர்வு கேட்டா

பஞ்சாப்பை
பாருங்குது
ஒன்னு

ஆந்திராவை
கை காட்டுது
இன்னொன்னு..

அது சரி...

சோறாக்கும்
அரிசி விலை
ஆழாக்கிற்கு
பத்து ரூபா ஏறிடுச்சேன்னு
கேட்டா

“சோமாலியாவை
பாருன்னு”

அடுத்ததாக
ஒன்னு
அறிவாக
பேசும் பாரு...

ஆக...

லண்டனுக்கு
போய்வந்த
தண்டக்காரியம்
குறித்து

ஊடகத்தை
கூட்டிவச்சு
உலகுக்கு சொல்ல

ஒன்னுக்கும்
துப்பில்லை...

அரிசி பருப்பு
விலை எல்லாம்
ஆகாயம்
நோக்கி

ஆளத்
தெரியாத
மக்குகளால்

மாநிலத்தின்
வளர்ச்சி
பாதாளம் நோக்கி...

ஆறு கோடி
செலவு செஞ்சு

மேட்டூர்ல
சூட்டிங்
நடத்திய
காவேரித்தண்ணி
அடுத்த ஊரு
தாண்டுறதுக்குள்ள
ஆவியாகிப்
போச்சு...

படுகை விவசாயம்
பதராகி
உழுது நடாமலே
சாவியாப் போச்சு...

துருப்பிடுச்ச
வண்ணத்தில்
இந்த
துக்ளக் ஆட்சி

துயரங்கள்
தொடரவே

அன்றாடம்
நடக்கும்
ஆதாயக்
கொலைகளால்

சென்னை
முதல்
சிவகங்கை
வரை
சீரழியும்
காட்சி...

ஆக
மொத்தத்தில்

சீர் கெட்ட
பிளாக் டிக்கெட்
ஆட்சியால்

ஊர் கெட்டுக்
கிடப்பதற்கு

“பழனி மலை
முருகன்
முதல்

மாமதுரை
மீனாள்” வரை

அல்லாடும்
தெய்வங்களே

சத்தியமா
சாட்சி...

என்னநாஞ் சொல்றது



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்

### மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்:

# கழக சட்டத்துறை ஆலோசனைக் கூட்டம்!

## ஆர்.எஸ். பாரதி – என்.ஆர். இளங்கோ – இரா. கிரிராஜன் பங்கேற்பு!

செங்கல்பட்டு, செப். 23 -

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் குறித்து கழக சட்டத்துறை ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.





கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சீரிய வழிகாட்டுதலோடும், மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் தொடர்பான கழக சட்டத்துறையின் ஆலோசனைக் கூட்டம் செங்கல்பட்டு கணேஷ் பவன் அரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் என். கானகராஜ் வரவேற்புரையாற்ற, பி. கார்த்திகேயன் தலைமை வகித்தார்.

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என். ஆர். இளங்கோ, வழக்கறிஞர் இரா. கிரிராஜன் எம்.பி., சி.வி.எம்.பி. எழிலரசன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்வில் சட்டத்துறையின் இணைச் செயலாளர்களான கே.எஸ்.இரவிச்சந்திரன் மற்றும் ஜெ. பச்சையப்பன், துணைச் செயலாளர்கள் கே.சந்த்ரு, மருது கணேசன், பெ. ரகு, தலைமைக் கழக வழக்கறிஞர்கள் கே.ஜே.சரவணன், மீஞ்சூர் சுரேஷ், சுவை சுரேஷ், மற்றும் வழக்கறிஞர்கள் ஆர். திருமுருகன், ஜி. தேவராஜன், கலையரசன் நடராஜன், சுரேஷ்குமார், ரமேஷ்குமார், ஜி.வடிவேல் உள்ளிட்ட மதுராந்தகம் தொகுதிக்குட்பட்ட வழக்கறிஞர்கள் பெருமளவில் கலந்துகொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், சென்னாக்கபாளையம், மறைந்த அய்யா முத்துசாமி கவுண்டரின் மருமகள் ஜெயந்தி இளங்கோவை தாராபுரம் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் சுகன்யா மணிவாசகம் உடன் முன்னாள் அமைச்சர் முனைவர் கோவி செழியன் சந்தித்து ஆதரவு கோரினார். உடன் திருப்பனந்தாள் கிழக்கு ஒன்றிய செயலாளர் மிசா மனோகரன், திருப்பனந்தாள் மத்திய ஒன்றிய செயலாளர் உதயா இரவிச்சந்திரன், திருமலைபாளையம் ஊராட்சி கழக செயலாளர் கணேஷ் குமார், நிர்வாகிகள் கனகராஜ், கிருஷ்ண குமார் ஆகியோர் உள்ளனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி திராவிட முன்னேற்றக் கழக வெற்றி வேட்பாளர் சுகன்யாவை ஆதரித்து கொளத்துப்பாளையம் பேரூர் பாகம் எண்: 205 காந்திஜி நகரில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ. வி.மார்க்கண்டேயன் பாக முகவர்கள் மற்றும் மகளிர் அணி நிர்வாகிகளுக்கான ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை வழங்கினார்.உடன் விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இமானுவேல், பொதுக்குழு உறுப்பினர் ராஜாக்கண்ணு, வடக்கு மாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் முத்துராஜ், வடக்கு மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் பாண்டியராஜன், எப்போதும்வென்றான் சோலைசாமி திருக்கோவில் அறங்காவலர் குழு தலைவர் முத்துக்குமார், வடக்கு மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ரஞ்சித், குதிரைக்குளம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சண்முகையா பொறியாளர் அணி ரங்கராஜ் விளாத்திகுளம் பேரூர் 8வது வார்டு செயலாளர் மாரிராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.